THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, the 2nd April 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Harijan Hostel

* 34 *S.N. Q.*—SRI K. PERIANNAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Collector of Tiruchirappalli has recommended the opening of a Harijan Hostel in Tiruchirappalli town; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No proposals have so far been received, Sir.

(*b*) Does not arise.

SRI A. V. P. ASAITHAMBI : திருச்சியில் நடைபெற்று வருகிற அரிஜன ஆஸ்டல்கள் எத்தனை ? அந்த ஆஸ்டல்களில் அரிஜனங்கள் அல்லாத பல்வேறு மாணவர்களும் அனுமதிக்கப்படுகிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN : திருச்சியில் அரசாங்கத்தின் உதவி பெற்று ஹரிஜன மாணவர்களுக்கு என்று ஒரு ஆஸ்டல் நடைபெற்று வருகிறது. மாணவிகளுக்கு ஒரு ஆஸ்டல் அரசாங்கத்தின் சார்பாக நடைபெற்று வருகிறது. ஹரிஜன மாணவர்களுக்கு என்று நடைபெறுகிற ஆஸ்டல் சர்க்காரின் மானியம் பெற்று அம்பேத்காரின் பெயரால் மதிப்பிற்குரிய வீராச்சாமி அவர்கள் நடத்திவருகிறார்கள்.

SRI R. SUBRAMANIAM : அரிஜன ஆஸ்டல்களை ஏற்படுத்தும் விஷயத்தில் இப்பொழுது இருக்கக்கூடிய அரிஜன ஆஸ்டல்களை வருஷா வருஷம் கொஞ்சம் கொஞ்சமாக சர்க்காருடைய பார்வையில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில் வேலை செய்துவருகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் இனிமேல் ஏற்படப்போகும் ஆஸ்டல்களை சர்க்காரே ஏற்படுத்துவதற்கு பதிலாக தனிப்பட்டவர்கள் ஏற்படுத்துவதற்கு அனுமதிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய ஆஸ்டல்களுக்கு சர்க்கார் அங்கீகாரம் கொடுக்காது. அவர்களே முன்வந்து சொந்தப் பணத்தைப் போட்டு நடத்த முன்வந்தால் இப்பொழுது கொடுத்துவரும்மாதிரி ரெசிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் அரசாங்கத்தார் கொடுத்து உதவுமே அல்லாது மொத்தத்தொகை கிராண்ட் கொடுக்கப்பட மாட்டாது.

SRI M. JAGANNATHAN : திருச்சியில் உணவு விடுதி வசதி இல்லாமல் ஏராளமான அரிஜன வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும் கஷ்டப்படுவதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அதனால் அரசாங்கம் முன்வந்து அங்கே உணவு விடுதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : அங்கே மாணவர்கள் அதிகமாக இருப்பதால் சர்க்காரே ஒரு பெரிய இடம் கிடைத்தால் அங்கே ஆஸ்டலை நடத்தலாம் என்று யோசனை செய்துகொண்டிருக்கிறது. அங்கே

[2nd April 1958

சிலோன் எமிகிரேஷன் ஆபீஸ் கட்டிடம் இருக்கிறது. அரிஜன வெல்பேர் ஆபீசர் அதைப் பார்த்துவிட்டு அங்கே ஆஸ்டலை நடத்துவதற்கு இடம் போதுமா என்பதைப்பற்றி பரிசீலனை செய்து அதன் பிறகு அதைப்பற்றி அவர் ரெவினியூ போர்ட் காரியதரிசிக்கு எழுதுவார். டைரெக்டர் என்ன எழுதியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து அதன்பேரில் ரெவினியூ போர்டு ஒரு முடிவுக்கு வரும்.

Sri K. PERIANNAN : கடந்த மாதம் திருச்சி ஜில்லாவில் நடந்த அரிஜன அப்லிப்ட் கமிட்டியில் தீர்மானித்தபடி சர்க்கார் அங்கே ஒரு ஆஸ்டலை நடத்தவேண்டும் என்று கலெக்டர் அரசாங்கத்திற்கு சிபார்சு செய்திருக்கிறார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

The Hon. Sri P. KAKKAN : கலெக்டரிடத்தில் அந்த இடத்தை உபயோகப்படுத்தலாமா என்று கேட்கப்பட்டிருக்கிறது. புதியதாக ஒரு ஆஸ்டலை ஏற்படுத்துவதற்கு என்று இப்பொழுது அரசாங்கம் கேட்கவில்லை.

Sri T. S. RAMASWAMY PILLAI : திருச்சியில் ஆரம்பிக்கப் படப்போவதாக கூறப்படும் அந்த ஆஸ்டல் அடுத்துவரும் பள்ளித் துவக்க வருஷத்திலிருந்து திறக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

The Hon. Sri P. KAKKAN : அந்த இடம் ஆஸ்டலுக்கு பயன் படுமா என்ற முடிவு தெரிந்தபிறகுதான் அதைப்பற்றி முடிவு செய்யப் படும்.

Scholarships

* 35 *S.N. Q.*—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any persons belonging to Paravan community have applied for scholarships under the head 'Most Backward Classes' and whether their applications have been complied with; and

(*b*) if not, the reasons therefor?

The Hon. Sri P. KAKKAN : (*a*) & (*b*) Yes, Sir. Orders of Government making Converts from the Most Backward Classes eligible for scholarships were issued only in March 1958, and hence the applications for scholarship from the students of Paravan Community could not be complied with within the current financial year.

Sri M. K. SOMASUNDARAM : மொத்தம் எவ்வளவு அப்ளி கேஷன்கள் பரவன் கம்யூனிட்டியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன, அதில் எத்தனை சாங்ஷன் செய்யப்பட்டன என்பதை கனம் மந்திரி அவர்கள் தெரிவிப்பார்களா ?

The Hon. Sri P. KAKKAN : இதைப்பற்றி தனியாக ஒரு கேள்வி போடுங்கள், பதில் சொல்லுகிறேன்.

Onre Kulam

* 36 *S.N. Q.*—Sri A. V. P. ASAITHAMBI : Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government propose to purchase the picture entitled 'Onre Kulam'?

The Hon. Sri P. KAKKAN : Yes, Sir. The proposal is still under the consideration of the Government.